உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 5 | 1923ஹு பிப்ரவரிமீ | பகுதி 2

(7) ஸ்ரீ ராமாவதாரம்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

18646

மிகுந்த ஆவலோடு அதிவிரைவாய் வந்த தசரத சக்ரவர்த்தியை உரோமபாத மகாராஜன் எதிர்கொண்டழைத்து ராஜோபசாரங்களைப் புரிந்து தக்கதோ ராசனத்தில் வீற்றிருக்கச் செய்தான். பிறகு சக்ரவர்த்தியின் கருத்தை அறிந்துகொண்டு, உரோமபாதன் கலைக்கோட்டு முனிவரைப்பணிந்து "சுவாமி! இதோ நிற்

கும் இவர் இராஜாதிராஜர்; அயோத்தியா புரியை இராஜதானியாகவுடையவர்; நற்குண நற்செய்கைகளில் மேம்பட்டவர்; தமது ஆளுகையின் கீழுள்ள எல்லாஜீவர்களையும் தம் உயிர்போலெண்ணுபவர். அவ்வாறு எண்ணித் தாம் உடம்புபோலிருந்து அவர்களுடைய சுகாதாரத்துக்கு வேண்டிய உதவிகளைச் செய்துவருபவர்; அப்படியுதவி புரிவதில் மனத்தளர்ச்சியடையாத சுபாவமுள்ளவர்; தேவர்களும் இவருடைய தயவை எதிர்பார்க்கத்தக்க பெருமை பூண்டவர், ஒருகாலத்தில் அத்தேவர்களுக்குச் சம்பராசுரனால் நேர்ந்த விபத்தையொழித்தவர்; இவரைக்கொண்டாடாத உலகமே கிடையாது; இவர் பெற்ற ஐசுவரியங்கள் எவருமே பெற்றதில்லை; அப்படியிருந்தும் இவருக்குப் பெருங்குறையொன்று மனத்தினிடத்துக் குடிகொண்டு இவரைப் பெரிதும் வருத்துகின்றது. அக்குறையை நீக்கிக்கொள்ளவே இப்போது இவர் தேவரீருடைய சந்நிதானத்தையடைந்தனர். சுவாமிகள் உத்தரவிட்டால் அந்தக் குறையை வெளியிடுகின்றேன்" என்றான்.

முனிவர் பெருமான், இம்மொழிகளைக் கேட்டுப் புன்முறுவல் பூத்து, உரோமபாத மகாராஜனைப்பார்த்து "அரசரே! எல்லோருக்கும் நற்குணமே நல்ல ஆஸ்தி. நற்குணமுடையவர்க்குப் பகவானே முன்னின்று சகல நலங்களையும் செய்துவருவான். இப்படி நல்லெண்ணங் கொண்டுள்ள தசரத பூபதியை இறைவன் கைவிடுவானா? விடமாட்டான். அந்தமன்னர் பிரானுடைய அபீஷ்டத்தை யாவருமறிய நீரே வெளியிடக் கடவீர்" என்றருளிச் செய்தார்.

உரோமபாதன் தபோதனரைப் பணிந்து "சுவாமி! இந்த வேந்தர்பிரான் தமக்குப் பின்னும் தமது ராஜ்யம் சுக நிலையிலிருக்க வேண்டுமென்று விரும்புகின்றார். அந்த விருப்பத்தை ஆதரிக்கத் தமக்கு அறிவறிந்த புத்திர சம்பத்து வேண்டுமென்று கோருகின்றனன். இந்தக் கோரிக்கையைத் தேவரீர் அநுக்கிரகித்து அருள்செய்ய வேண்டுமாறு யானும் தங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றான்.

உடனே கலைக்கோட்டு மகாமுனிவர் உரோம பாதனைக் கண்குளிர நோக்கி "மும் மூர்த்திகளுடன் நான்காவது மூர்த்தியாக வழிபடத்தகுந்த மகத்துவம் பொருந்திய வசிஷ்ட பகவானையே குருவாகக்கொண்ட தசரதருக்குக் குறைவு நேருவதுமுண்டோ? உத்தம அரசர்கள் தமக்குப்பின் தங்கள் குடிகளைச் செவ்வையாய்ப் பாதுகாத்து வரத்தக்க மகப்பேற்றை நாடுவது இயல்பே; தசரதருக்கு அவர்கொண்ட எண்ணம் நிறைவேறும். அதற்குரிய யாகத்தை நடத்தவேண்டிய வழியை உடனே தொடங்கச் செய்வாய்" என்றருளினார்.

இந்த இனிய கட்டளையைக் கேள்வியுற்ற சக்ரவர்த்தி முனிபுங்கவரை மிக்க பயபத்தியோடு அயோத்திக்கழைத்துக் கொண்டுபோய் உரிய ஆசனத்தில் அமர்த்திச் சகல உபசரணைகளையும் குறைவறச்செய்து வந்தனன். வசிஷ்டமுனிவரும் கலைக்கோட்டு முனிவரும் பற்பல விஷயங்களைக் குறித்துக் குசலவார்த்தையாடி, புத்திர காமேஷ்டி யாகத்துக்கான ஏற்பாடுகளைத் தீவிரமாக நடத்திவைத்தனர்.

பின்பு அந்த யாகத்தை இருவரும் குறைவு நேரிடா

தபடி பூர்த்தி செய்தனர். அந்த யாகாக்னியிலிருந்து ஒரு பூதம் கிளம்பியது. அது கையில் ஒரு பாத்திரத்தை ஏந்திவந்தது. அதில் தெய்வீகம் பொருந்திய பாயசம் இருந்தது. இப்படிக் கொண்டு வந்த பாத்திரத்தை முனிவர்கள் முன்வைத்துவிட்டுப் பூதமானது மறைந்து விட்டது.

முனிவர்கள் அந்தப் பாயசத்தைத் தசரதரிடம் கொடுத்து, தரும பத்தினியர் மூவருக்கும் பங்கிட்டுக் கொடுக்கும்படி ஆக்ஞாபித்தனர். அரசன் அதை மூன்றுகப் பகுத்துக் கோசலை, கைகேயி, சுமித்திரை என்னும் மூத் தேவியர்க்கும் அளித்தனன். அப்படி அளிக்கும் போது சிதறுண்டு போன பாயசத்தை ஒன்று திரட்டி அதையும் உட்கொள்ளும்படி சுமித்திரைக் குதவினன். இந்தச் சமயத்தில் மங்கள கோஷம் எங்கும் உண்டாயிற்று. மங்கள வாழ்த்தும் அதிகரித்தது.

யாக விஷயமாய் முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் செய்யவேண்டிய மரியாதைகளையும் தசரதன் மனக்களிப்போடு செய்து முடித்து அவர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டனன். பட்டமகிஷியர் மூவரும் கருக்கொண்டு தக்ககாலத்தில் பிள்ளைகளைப் பெற்றனர்.

*" ஒருபகல் உலகெலாம் உதரத்துட் பொதிந்
தருமறைக் குணர்வரு மவனை யஞ்சனக்
கருமுகில் கொழுந்தெழில் காட்டுஞ் சோதியைத்
திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை"

---

* ஒருபகல்=பிரளயகாலத்தில்; உதரம்=வயிறு; பொதிதல்=மறைத்து வைத்தல்; உணர்வு அரும்=அறிதற்கு அருமையான (கூடாத); திருவுற=சகலபாக்கியங்களும் பொருந்த; பயந்தனள்=பெற்றனள்; திறம்=மேன்மை.

பின்னர் இவ்வாறே கைகேயி ஒரு குழந்தையைப் பெற்றனள். அதன்பிறகு சுமித்திரை இரண்டு குழந்தைகளைப் பெற்றாள்.

இந்தச் சுபகரமான விஷயத்தைத் தசரத சக்ரவர்த்தி மிகவும் ஆடம்பரமாகக் கொண்டாடினன்; அளவற்ற தான தருமங்களையும் செய்தனன். நகரத்தை முழுதும் விசித்திரமாக அலங்கரித்துப் பற்பல சந்தோஷ லீலைகளைப் புரியுமாறு செய்தனன்.

> "ஓடுவார் விழுவார் உகந்து ஆலிப்பார்
> நாடுவார் நம்பிரான் எங்குற்றா னென்பார்
> பாடுவார்களும் பல்பறை கொட்டநின்று
> ஆடுவார்களும் ஆயிற்று" அந்த அயோத்தி.

பின்பு அக்குழந்தைகளுக்குக் காலா காலங்களில் செய்ய வேண்டிய சடங்குகளனைத்தையும் அரசர் பிரான் சம்பூரணமாக இயற்றினன். கௌஸல்யாதேவி பெற்றெடுத்த கான்முளைக்கு "இராமன்" என்றும், கைகேயி பெற்ற பிள்ளைக்குப் 'பரதன்' என்றும், சுமித்திரை பெற்ற இரண்டு குழந்தைகளுக்கும் முறையே 'இலக்ஷ்மணன்' என்றும் 'சத்ருக்னன்' என்றும் நாமகரணஞ் செய்தனன். தக்கவயதில் கல்விச் செல்வம், யானையேற்றம், குதிரையேற்றம், ஆயுதப் பழக்கம் முதலிய ராஜ வைபவங்களில் அப்பிள்ளைகளைத் தேர்ச்சியடைய வைத்தான். அப்போது ஸ்ரீராமனும் இலக்ஷ்மணனும் ஒரு ஜதையாகவும், பரதனும் சத்ருக்னனும் மற்றொரு ஜதையாகவு மிருந்து பாலலீலைகளைச் செய்து வந்தனர்.

அந்தக் காலத்தில் எதிர் வரும் குடிகளை ஸ்ரீராமன் மிக்க அன்புடன் நோக்கி "நீங்கள் சுகமா? உங்கள் குழந்

தைகள் முதலிய யாவும் க்ஷேமமா?" என்று வினவி வருவான். இவ்விதமாக அரசனும் அவன் குடும்பமும் அவனைச் சார்ந்த குலகுரு முதலிய பெரியாரனைவரும், குடிகளும் இப்பிள்ளைகளின் பாலலீலையில் களிப்படைந்து எவ்வித விசனமுமின்றி வாழ்ந்து வந்தார்கள். (வரும்)

ஒரு தர்க்க சாஸ்திர பண்டிதர் ஒரு பீப்பாய் நிறைய எண்ணெய்வார்த்து மூடிபோட்டு இருக்கிப் பூட்டுப்போட்டு அதன் மேல் ஸீல் வைத்தான், சிலநாள் கிரமித்த பிறகு அவர் அந்தப் பீப்பாயைத் திறந்துபார்க்க, அதில் பாதிவரையில் எண்ணெய் குறைந்திருந்தது. பூட்டும் ஸீலும் அசையாமல் அப்படியே இருப்பதையும் உள்ளே எண்ணெய் குறைந்திருப் பதையும கண்டு அந்தப் பண்டிதர் "இது ஏதோ பெரும் விசித்திரமாயிருக்கிறது. பீப்பாய்ப் பலகைக்கும் எண்ணெய்க்கும் உள்ள சம்பந்தத்தினுல் இது நேர்ந்திருக்கும் இதை நன்ருய்க் கண்டறிய வேண்டும்" என்று நினைத்துத் தன் பாண்டித்தியம் அனைத்தையும் உபயோகித்து ஆலோசிக்கத் தொடங்கினுர். அப்பொழுது சமீபத்திலிருந்த சில பாமார் "பீப்பா அடியில் யாராவது துளையிட்டு எண்ணெய் எடுத்துக் கொண்டிருப்பார்களோ என்னவோ பரிக்ஷித்துப் பாருங்கள்" என்று அந்தப் பண்டிதருக்குச் சொல்ல அவர் "சீ சீ! மூடர்களே பீப்பாய்க் கடியில் எண்ணெய் குறையவே இல்லை. மேற்பாகத்து எண்ணெய் மட்டுந்தான் குறைந்திருக்கிறது என்று சொல்லி அவர்களுடைய புத்திக் குறைவிற்குப் பரிகாசம் பண்ணித் தான் முன் போலவே ஆலோசிக்கத் தொடங்கினுன்.

வித்வரகஸ்யம்

காளமேகப் புலவர், ஒருசமயம், நாகப்பட்டினத்தில் காத்தான் சத்திரத்தில் சாப்பிடப் போயிருந்தார். சத்திரத்துப்பிராமணன் அவரைச் சிறிது நேரங் காக்கவைத்தான். அவர் வசைபாடும் வரகவி என்பது அவனுக்குத் தெரியாது. புலவர் கொஞ்சநேரங் காத்திருந்து, பசிபொறுதவராய், அங்கிருந்தவரை நோக்கி "பசிக்குச் சாப்பாடு வேண்டியவர்கள் இந்தச் சத்திரத்திற்குத்தான் வரவேண்டும். ஏனென்றால் இங்கு எப்போதும் அஸ்தமிக்குஞ் சமயத்தில்தான் சமையலுக்கு அரிசிவாங்கிக்கொண்டு வருவார்கள். அப்படி வாங்கிவரும் அரிசியை உரலிலிட்டுக் குத்தி உலையிலிடும்போது எங்கும் நிசப்தமாயிருக்கும். அதாவது அர்த்தராத்திரியாய்விடும். பிறகு சமைத்த சாப்பாட்டில் ஒரு அகப்பை அன்னத்தை எடுத்து இலையில் பரிமாறும்போது கிழக்கு வெளுக்கும். இப்படியானல் பசியறிந்து போஜனந் தரத்தக்க சத்திரம் இதுதான் என்று புகழலாமல்லவா?" என்று பரிகாசஞ் செய்தார்; இந்தப் பரிகாசத்தை,

"கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்றன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும்—குத்தி
உலையிலிட வூரடங்கும் ஓரகப்பை யன்னம்
இலையிலிட வெள்ளி யெழும்"

என்னும் ஒருவசைகவியாகப் பாடிவிட்டார்.

இதுகண்ட அங்கிருந்தவர்கள் சத்திரத்துப் பிராமணனைப்பார்த்து "ஐயரே! மோசம் வந்துவிட்டது. இன்றோடு உமது சத்திரம் பாழடைந்துபோம் படியாகப் புலவர் சபித்துவிட்டார். உமக்கும் அநர்த்தந்தான் வந்து சம்பவிக்கும். அவர் பசியோடு வந்து உம்மைப் போஜனங் கேட்டார். நீர் ஏதாவது கொடுத்து அவரைச் சாந்தப்படுத்துவதை விட்டுச் சமையலாகிற பரியந்தம் காத்திருக்கும்படி வைத்தது தப்பிதந்தான். பசிவேளைக்குப் பயன்படாத அன்னம் பாழ்தானே. சீக்கிரம் அவரை உபசரித்து வேண்டிக்கொள்ளும். இரக்கங்கொண்டு அநுக்கிரகஞ் செய்வார்" என்று பயப்படுத்தினர்.

உடனே சத்திரத்துப் பிராமணன் புலவரிடஞ் சென்று அவர்காலில் விழுந்து பணிந்து, "சுவாமி! தங்களை இன்னாரென்றறியாமல் செய்தபிழையை மன்னித்து, என்னை ரக்ஷிக்கவேண்டும். நானோ ஏழைப் பிராமணன்; இச்சத்திரத்தில் வரும் அற்ப ஊதியத்தைக் கொண்டு தான் நான் காலங்கழிக்க வேண்டியவனாய் இருக்கிறேன்" என்று பிரார்த்தித்துக் கொண்டான்.

வேதியராகிய காளமேகப் புலவர் அவன் வேண்டுகோளுக்கிரங்கி அவனைப் பார்த்து "புத்திவந்ததா? சரி. நான் உன் சத்திரத்தைப் புகழ்ந்து பாடினேனே யொழிய இகழ்ந்துபாடவில்லை. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறென்னும் என்கிறபடி உனக்கது விரோதமாகத் தோன்றிற்று. அதன் கருத்தை நான் சொல்லுகிறேன் கேள்.

ஒலிக்கின்ற கடலால் சூழப்பெற்ற நாகப்பட்டணத்திலுள்ள காத்தான் என்னும்சிறப்புப் பெயரைக் கொண்ட அந்தணனுடைய சத்திரத்தில், மற்ற சத்திரங்களைப்

போல் பாழடையாமல் கருப்பு (பஞ்சம்) நேரிட்ட காலத்திலும் யதேஷ்டமாக அரிசிவரும். அரிசியைக் குத்தி உலேயிலிட்டுச் சமைத்தால் அச் சாப்பாடு ஊரிலுள்ளார் அனைவருக்கும் போதுமானதாகும். அன்னத்தில் ஒரு அகப்பையன்னத்தை இலேயில் வைத்தால் அதன் வெண்மையைக் கண்டு வெள்ளியாகிய சுக்கிரன் நாணமடைந்து தோற்றோடிப் போவான் என்பதாம்.

இப்படி நான் உன் சத்திரத்தின் பெருமையைக் கொண்டாடியிருக்க நீ யேன் வீணகக் கலவரப்பட்டு வருந்தவேண்டும்?'' என்றார்.

சத்திரத்துப் பார்ப்பான் இதைக் கேட்டு மகிழ்ந்து அவரைத் தக்கபடி உபசரித்து அனுப்பினன்.

வித்வரகஸ்யம் இப்படியிருப்பதால் நாம் வித்வான்களுடைய வாக்கில் எப்போதும் பெருமைபாராட்டி அவர்களைக் கனப்படுத்தி வரவேண்டும்.

ஜீவகாருண்யம்.

ஒரு மகமதியமாது ஒருநாள் கொடிய வெயில் வேளையில் காட்டிலே போய்க்கொண்டிருந்தாள். அவள் சகல பாபகர்மங்களுக்கும் இருப்பிடமா யிருந்தாள். அவள் பரம ஏழை. காட்டில் தனக்கு முன்னே ஒருசிறு நாயையும் அது ஒரு கிணற்றண்டைபோய் எட்டிப் பார்ப்பதையும் பிறகு பத்தடி பின்னேபோய் மீண்டும் வந்து கிணற்றை எட்டிப் பார்ப்பதுமாயிருந்தது. இதைக் கண்ட மகமதியமாது "ஓ இந்த நாய்க்குத் தாகம் அதிகமாயிருக்கிறது போலிருக்கிறது, அதனாலே தான் இது கிணற்றண்டை அடிக்கடி போய்ப்போய் வருகிறது''

என்றெண்ணி அந்த நாயைப் பார்த்துக்கொண்டே போனாள். அந்த நாய் மீண்டும் அம்மாதிரி நாலைந்து தடவைபோய் வந்து பிறகு களைத்துப் போய்ப் படுத்துக் கொண்டது. அந்தச் சமயத்தில் இந்த மாதும் அங்கே போய்ச் சேர்ந்தாள். நாய் அந்த மாது தன் அருகில்வந்தவுடன் கொஞ்சம் வாலை ஆட்டிற்று. ஆனால் அது எழுந்திருக்கவில்லை. அதைக் கண்ட அவள் "ஓ இது களைத்துப் போய்விட்டது. இதற்குத் தாகந்தணிய நீர் கிடைக்குமாயின் பிழைக்கும் என்றறிந்து கிணற்றைப் பார்த்தாள்.

கிணறு மிகச்சிறியது ஆனால் ஜலம் நான்கு பாகத்துக்குக் கீழே இருக்கிறது. ஆகா இவ்வளவு ஆழத்திலிருக்கும் ஜலத்தை எப்படி யெடுத்து இதற்குக்கொடுப்பது" என்று அம்மாது சற்றுக் கலங்கினாள். பின் தான் காலிலணிந்திருக்கும் சடாவில் ஒன்றைக் கழற்றியெடுத்துக் கொண்டாள். தன் முன்தானையை அவிழ்த்து அதில் நான்குபாக அளவுக்குத் துணியைக் கிழித்து அந்தச் சடாவில் நுனியிலும் கடையிலும் கட்டிச்சேர்த்து பாத்திரம் போலாக்கி அதைக் கிணற்றில் விட்டு அதுகொள்ளும் ஜலத்தை வெளியே எடுத்து நாய்க்குவைத்தாள். நாய் ஸந்தோஷமாகக் குடித்தது. பிறகு அவ்வாறே அந்த நாய்குடிக்கும் வரையில் ஜலமிழுத்துவைத்தாள். பத்துப் பன்னிரண்டுமுறை ஜலமிழுத்திருப்பாள். பிறகு நாய் தாகந்தணிந்து எழுந்தது.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த தேவனு தன் அவள் அதுவரையில்செய்த மகாபாபங்களை யெல்லாம் மன்னித்து அவளுக்கு மேலான எண்ணத்தைத் தந்து காலமுடிவில் அம்மாதுக்கு நற்கதியையும் தந்தான். இது ஜீவகாருண்யத்தின் மகத்துவமாதலால், இரக்கமும் பரோபகாரமும் மனிதனுக்கிருக்கவேண்டிய முக்கியமான குணங்களாம்.

கூரம்பாயினும் வீரியம்பேசேல்.

இந்தப் பழமொழி ஒருவன் எத்துணைப் புஜபல பராக்கிரமசாலியா யிருந்தாலும் அவனுந் தன்னைத் தானே புகழ்ந்து கொள்வது கூடாதென்னும் ஒரு பெரிய போதனையைத் தெரிவிக்கின்றது. ஆனைக்கும் அடிசறுக்கும் என்பதை மறந்து தற்புகழ்ச்சிக்கு இடந்தருவது தவறேயன்றோ?

"தன்னைவியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர்சொரிந்து வளர்த்தற்று"

என்று பெரியோர் சாற்றுகின்றனர். அதாவது ஒருவன் தன்னைப் பிறர் பெருமைபடுத்தவேண்டுமென்று கருதித் தன்னைத்தானே புகழ்ந்து பேசுதல் எண்ணெய்க்குப் பதிலாக நீரைவிட்டு விளக்கெரிவிப்பது போலாகும் என்பதாம். ஆகையால் இவ்விஷயத்தில் அனைவரும் விழிப்பாயிருத்தல் வேண்டும்.

பிறரால் பெருமையடைய வேண்டுமென்னும் எண்ணத்தை மேற்கொண்டவன் அனுசரிக்கவேண்டிய உபாயமொன்றிருக்கிறது. அது,

"பிறர்பிறர் சீரெல்லாந் தூற்றிச் சிறுமை
புறங்காத்த" லாம்.

ஒவ்வொருவரிடத்தும் நன்மையுந் தீமையுங் குடி

புகுவது சகஜம். ஆதலால் எவனொருவன் பிறரிடத்தில் காணுந் தோஷத்தை மறைத்து நன்மையைமட்டும் பிரஸ்தாபப் படுத்துகிறானோ அவன் மற்றவரால் பெருமை பெறுவானென்பது திண்ணம்.

"தானே சமர்த்தன்; தன்னால் எதையுஞ் சாதிக்க முடியும்" என்று மார்தட்டுபவன் ஒருகால் அபஜயமுற்று வருந்தவும் நேரிடும். இது சம்பந்தமாக ஒரு சிறு கதை சொல்வர் பெரியோர்.

கதை.

துவாரகாபுரியை ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி பரிபாலித்து வருங்காலத்தில் அப்பட்டணத்தில் ஒரு வேதியரிருந்தார். அவரோ நல்லொழுக்கத்தில் தலைமை பெற்றவர்.

"ஒழுக்கம் விழுப்பந்தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

என்கிற வேதவசனத்தின் உளவுதெரிந்தவர் அதனை எங்ஙனம்விடுவர். ஆகவே, ஒழுக்கத்தைமேற்கொண்ட இவ்விப்பிரர் இல்லறவாசியா யிருந்தார். இவருக்கு இவர் மனைவியிடம் பிறக்குங் குழந்தைகளெல்லாம் உடனே மரித்துப் போவதுண்டு. இப்படி இவர் எட்டுக்குழந்தைகளை இழந்துபோயினர். மகப்பற்று கொடியதல்லவா? "கடவுள் நமக்குப் புத்திரசம்பத்தைக் கொடுத்தும் 'கைக்கெட்டுவது வாய்க்கெட்டாதபடி' செய்துவிடுகிறார். இப்படியும் நமது தலைவிதி யிருக்கவேண்டுமா? குழந்தைகளைக் கொடுத்துக் கொடுத்துப் பிடுங்கிக் கொள்ளுவதால் நமக்கு ஆயாசம் மெத்தவும் உண்டாகின்றதே" என்று நினைத்து வருத்தப்பட்டுக்கொண்டிருந்தார்.

இவ்வாறிருக்க இவருக்கு ஒன்பதாவது குழந்தை

யொன்று பிறந்தது. அதுவும் உடனே இறந்துபோயிற்று. இதைக்கண்ட அந்தப் பிராமணருக்கு வயிற்றெரிச்சல் அதிகமாயுண்டாயது. இறந்துபோன அந்தக் குழந்தையை அப்போதே தமது கையிலெடுத்துக்கொண்டு ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியின் அரண்மனை வாயிலை யடைந்து, வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு "இந்த அநியாயம் எங்குங் கண்டதில்லையே! நீதிவழுவாத ராஜாங்கத்தில் அகால மரணங்கள் எப்படிச் சம்பவிக்கும்? சுமந்து சுமந்து பெற்ற குழந்தைகளை இவ்வண்ணங் குடிகள் இழப்பதானல் அது இராஜ நீதிக்குப் பழுதையல்லவா உண்டாக்கிவிடும். என் குறைக்குக் கேள்வி முறை யில்லையா?" என்று கூவத்தொடங்கினர்.

அப்போது அந்த அரண்மனை வாயிலினிடத்து அர்ச்சுனன் உலாவிக்கொண்டிருந்தான். இக்கூச்சல் அவன் காதில் விழுந்தது. அவன் உடனே வேதியரை நோக்கி "ஏன் கத்துகின்றீர்? உமக்குப் பிறக்குங் குழந்தைகளை இறவாதபடி ரக்ஷிக்க இதுவரையில் ஒருவரும் ஏற்பட வில்லைபோலும். போனது போகட்டும். இனி உமக்கு அடுத்த குழந்தை பிறக்கும்போது, பிரசவ வேதனையிலிருக்கும் சமயத்தில் என்னை வந்து காணக்கடவீர். நான் அந்தக் குழந்தையைக் காப்பாற்றித் தருகின்றேன். என் ஆண்மையைச் சோதித்துப்பாரும். வீணாக ஏனிப்போது பெருங்குரல் பாய்ச்சி ஆயாசப்படுகிறீர்? கைவிட்டுப்போனது கத்துவதால் மீண்டுங் கை கூடவா போகிறது? நானிருக்கிறேன். இனிநீர் சஞ்சலப் படவேண்டாம்" என்று சொல்லிச் சமாதானப் படுத்தினன்.

வேதியரும், "நல்லது-இந்த வீரத்தன்மையையும் பார்த்து விடலாம்" என்று சிந்தித்து வீடுபோய்ச் சேர்ந்தார்.

பிறகு இரண்டொரு வருஷங்கள் கடந்ததும் மேற்படி பிராமணருக்குப் பத்தாவது குழந்தை பிறக்கும் சமயம் நேர்ந்தது. அவர் அந்தக்ஷணமே வில்லாளியாகிய அர்ச்சுனனிடம் போய் வந்தகாரியத்தைத் தெரிவித்தார்.

அர்ச்சுனன் அவ்விப்பிரருடன் அவர் வீட்டுக்குப் போய்ப் பிரசவ அறையில் நுண்ணிய காற்றும் வெளியேறுதபடி சரக்கூடு கட்டி வைத்தான். குழந்தை தாய் வயிற்றினின்றும் வெளிப்படாமலே மறைந்துபோய் விட்டது.

இதைக்கண்ட வேதியர் மகா கோபத்துடன் அர்ச்சுனனிடம் வந்து "ஐயா! புருஷசிங்கமே! உமது வல்லமையின் அழகே அழகு! உமது பேச்சின் உறுதியை நம்பி வெகுவாய் மகிழ்ந்திருந்தேன். கடைசியில் மண் குதிரையை நம்பி ஆற்றிலிறங்கியவனானேன். இதுவரையில் குழந்தைகளைக் கண்ணாரக்கண்டு கையில் எடுத்து மசானத்திற் சேர்த்து வந்தேன். இப்போது உமது தயவினால் குழந்தையின் உருவே தோற்றுதபடி தாய் வயிற்றிலிருந்தே அது மறைந்து போயிற்று. இதுதான் உம்மால் நான்கண்ட அதிசயம்" என்றார்.

அர்ச்சுனனுக்கு இது பெரிதும் அவமதிப்பை உண்டு பண்ணிவிட்டது. "சீ நாம் இனி உயிரோடிருப்பது சரியன்று. மாய்ந்து போவதே உத்தமம்" என்று தீவளர்த்தி அதில் விழுந்திறக்கத் துணிந்தான். அப்

போது ஸ்ரீ கிருஷ்ணபகவான் பிரத்தியட்சமாய் "அர்ச்சுனு! நீ எப்போதும் தற்புகழ்ச்சி செய்து கொள்ளுவதிலேயே சந்தோஷித்திருந்தாய். அதையடக்குவதற்கே இந்தச் சூழ்ச்சியை நான் ஏற்படுத்தினேன். தெய்வ சங்கற்பத்தின் முன் உன்ஜெபம் சாயுமா? இனி நீ தற்புகழ்வதை விட்டுவிடு" என்று திட்டஞ்செய்து, வேதியருக்கு அவருடைய குழந்தைகளைக் கிரமப்படி அருள்செய்து வாழ்த்தியனுப்பினர்.

குழந்தைகளே! இக்கதையால் நாம் எவ்வளவு பலம் பொருந்தியவராயிருந்தாலும் நமது காலே நாமே கும்பிட்டுக் கொள்வது தகாதென்றும், 'கூரம்பாயினும் வீரியம் பேசேல்' என்னும் பழமொழியே நம்மை உயர்த்தக் கூடிய உபதேசமென்றும் தெரிந்துகொண்டோம். அவ்வாறே நடந்துவர முயலுவோமாக.

எங்கள் முருகன்

(1) அன்னையைப்போ லாதரிப்பான் அழகுமயில முருகன்
சொன்னகுறை கேட்டருள்வான் தோகைமயில் முருகன்
சின்னஞ்சிறு பையனவன் சித்ரமயில் முருகன்
தன்னைநிக ரில்லாதான் தங்கமயில் முருகன்.

(2) சத்திவடி வேலன்சிவ சாமியெங்கள் முருகன்
சித்திதரும் சீலனுண்மைத் தெய்வமெங்கள் முருகன்
பக்தபரி பாலனுமை பாலனெங்கள் முருகன்
முத்திதரு மூலன்குரு மூர்த்தியெங்கள் முருகன்.

புது நாகரிகம் I.

அறுபது வயதுள்ள அமங்கலி ஒருத்திக்கு முப்பது வயதுள்ள ஒருபுத்திர னிருந்தான்.

பெண்சாதியை இழந்து ஐம்பது வயதுள்ள ஓர் ஆடவனுக்கு இருபத்தைந்து வயதுள்ள ஒரு பெண் இருந்தாள். அமங்கலியின் புத்திரனுக்கும் ஆடவனின் புத்திரிக்கும் கல்யாணம் நிச்சயிக்கப்பட்டு நடந்தேறியது. சதிபதிக ளிருவரும் சந்தோஷமாயிருந்து வருகிறார்கள்.

இந்த வைபவத்தைப் பார்த்த அமங்கலிக்கு "நினைத்துக் கொண்டாளாம் கிழவி வயதுப் பிள்ளைக்கு வாழ்க்கைப்பட" என்பதுபோல ஓர் எண்ணம் உதயமாயிற்று. உதயமானதும் சூரியன்மேலே எழுந்து செல்வது போல் இவளும் பரபரப்புடன் எழுந்து ஐம்பதுவயதுள்ள ஆடவனாகிய தன் சம்பந்தியிடம் சென்று நம் குழந்தைகளுக்கோ கல்யாணம் ஆய்விட்டது. அவர்களோ சந்தோஷமா யிருக்கிறார்கள். நீரோ பெண்சாதியில்லாமலிருக்கிறீர்; நானோ புருஷனில்லாமலிருக்கிறேன். நாமிருவரும் மனமொப்பி மணந்துகொண்டால் மனோல்லாசமாக இருக்குமே" என்றாள். ஆடவனும் அதற்கிசைய மனப்பொருத்தத்தையே ஆதாரமாகக் கொண்டு கணநேரத்தில் காந்தர்வவிவாகம் நடந்தேறியது.

நேயர்களே! இத்தகைய விவாகம் மேல்நாட்டில் நடப்பதாக நாம் புத்தகங்களில் படிக்கிறோம். இந்த நாகரிகத்தைத் தான் நம்மவர்களுள் சிலர் கையாள வேண்டுமென்கின்றார்கள்.



தாயுமான சுவாமி மலை.

தாயுமான தயாபரன்

புண்ணிய நதியென்றும் ஜீவநதியென்றும் புகழும் காவிரிநதியின் தென்கரையில் திரிசிராப்பள்ளி என்று ஒருபட்டணமிருக்கிறது. இப்பொழுது அதனைத் திருச்சினுப்பள்ளி யென்று தவறுதலாகச் சொல்லுகிறார்கள். இது சிறந்த சிவஸ்தலம். இதற்குநேர் வடக்கே காவிரிக்கு அக்கரையில் ஜம்புகேசுவரம் என்று ஒரு சிவஸ்தலமிருக்கிறது. இதற்குத் திருவானைக்காவல் என்று ஒரு பெயருண்டு. இது காவிரிக்கும் காவிரிநதியின் பிரிவாகிய கொள்ளடத்திற்கும் நடுவே இருக்கிறது. திருவானைக்காவலுக்குச் சற்று மேற்கே ஸ்ரீரங்கம் என்கிற விஷ்ணுஸ்தல மிருக்கிறது. திரிச்சிராப்பள்ளியில் பட்டண மத்தியில் விளங்கும் அழகிய குன்றின்மீது சிவபெருமான் திருக்கோயில் கொண்டிருக்கிறார். இந்தக் குன்று பார்வைக்கு விருஷபமே மலையானதுபோலத் தோன்றும். வெகு அழகாயிருக்கும். திருவானைக் காவலிலும் ஸ்ரீரங்கத்திலும் பிரமாண்டமான கோவிலிருக்கிறது.

இந்த மூன்று ஸ்தலமும் அந்தப் பக்கத்துக்கேயன்றி இந்தியாவிற்கேசிறந்தயாத்திரை ஸ்தலங்களென்று சொல்லும்படியான பெருமை வாய்ந்துள்ளன. திரிச்சிராப்பள்ளி இதனைத் திரிசிரபுரம் என்றும் சொல்வார்கள். திரிசிரபுரத்து மலையில் திருக்கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானுக்குத் தாயுமானவர் என்று பெயர். இந்தப்

பெயர் சிவபெருமானுக்கு ஏற்பட்டதற்குக் காரணமாக ஓர் இதிகாசமுண்டு. அது சர்வலோக சரண்யனும் சர்வாந்தரியுமாகிய ஜகதீசன், தம்மை நம்பியவரைக் கைவிடுவதில்லை; என்றும் காப்பாற்றுவார் என்னும் ஓர் அரிய நீதியை விளக்குவ தாகையினால் அதனை விசாரிக்கலானோம்.

திருவானைக்காவல் திரிசிரபுரத்தைப்போல் பட்டணமல்ல ; பெரியகிராமம். இங்கிருந்து ஜனங்கள் திரிசிரபுரம் போய்ச் சுவாமிதரிசனம் செய்வார்கள். திரிசிரபுரத்திலிருந்து இவ்வூருக்கும் தரிசனத்துக்கு ஜனங்கள் வருவார்கள். இந்த இரண்டு ஸ்தலத்திற்கும் நடுவில் காவிரி நதியிருக்கின்றமையினால் இந்தநதி பிரவகித்திருக்கும் போது படகேறியும் வற்றியகாலத்தில் கால்நடையாகவும் ஜனங்கள் அதனைக்கடந்து செல்வார்கள். இக்காலத்திலிருப்பதுபோல் முன்காலத்தில் அதற்குப் பாலம் கிடையாது.

திருசிராப்பள்ளிக்கு மேற்கே கொஞ்சதூரத்தில் உறையூரென்று ஓர் ஊரிருக்கிறது. அங்கே ஒரு செட்டிப் பெண்ணிருந்தாள். அந்த பாக்கியவதி சிவபெருமானிடம் மாறாத அன்புகொண்டவள். அவள் தினந்தோறும் திரிசிரபுரத்துச் சிவபெருமானுக்குப் பூமாலை கட்டிக் கொண்டுபோய்க் கொடுத்துத் தரிசனம் செய்துவிட்டு வீட்டுக்குத் திரும்புவது வழக்கம். அவள் பக்தியை எல்லோரும் மெச்சுவார்கள். அவளைக்கண்டால், “புண்ணியவதி செல்கிறாள் ; இந்தப் பக்தசிரோமணியைத் தரிசித்தால் நமக்குச் சிவபெருமானைத் தரிசித்த பயன் கிடைக்கும்” என்பார்கள். இந்த மகராஜி, ஈசனுடைய திருவரு

னினால் கர்ப்பமடைந்தாள். பிரசவகாலமும் சமீபித்தது. இவளுக்குத் தன் தாயாரைத்தவிர மாதர் துணை வேறு கிடையாது. தாயார் திருவானைக் காவலிலிருந்து வந்தாள். அவள் தினந்தோறும் வந்து தன் பெண்ணைப் பார்த்துவிட்டுப் போவாள். இப்படி யிருக்கையில் ஒரு நாள் தாயார் புறப்பட்டு வரும்போது காவேரியில் வெள்ளம் வந்துவிட்டது. வெள்ளந் திடீரென்று வந்துவிட்டபடியால் படகுவிடுவோரில்லாமற் போயினர். ஆகவே கிழவி இக்கரையிலே தங்க நேரிட்டது. மகள் என்ன செய்கிறாளோ? என்ன நேர்ந்ததோ என்று எண்ணித் துக்கப்பட்டுக்கொண்டு சிவபெருமானை நினைந்தபடி ஒன்றுந் தோன்றாதவளாயிருந்தாள்.

இங்கிவள் இவ்வாறிருக்கையில், இவளுடைய மகளுக்குப் பிரசவசமயம் நெருங்கியது. வழக்கம்போல் இன்றும் கோவிலுக்குப் போய்வரப் புறப்பட்டாள். புறப்பட்டு வரும்வழியில் இவளுக்கு பிரசவவேதனை கண்டது. அந்தோ! ஈசா! உன்னுடைய தரிசனம் இல்லாமல் வீடு திரும்பவேண்டி யிருக்கிறதே, என்னசெய்வேன்! வீட்டிலும் துணைக்கு என் அன்னை வரவில்லையே! என்றெண்ணி மனமுருகி ஈசனைத் துதித்துக்கொண்டு நின்றாள். அங்கே சிவபெருமான் அந்த உத்தமிக்குக் காட்சிதந்து, "நீ வீட்டுக்குப்போ, உன் தாயார் உனக்குத் துணைசெய்ய வருவாள்" என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார். அந்தப் பதிவிரதாசிரோமணி, சிவபெருமானுடைய திருவருளை வியந்து கண்களில் நீர் பெருகநின்று துதித்து வீடுதிரும்பினாள். சிவபெருமான் இவ்வாறு காட்சிதந்த அந்த இடத்தில் தான்றோன்றி

18646

ஈசர் கோவில் என்று ஒரு கோவில் இன்றைக்கும் விளங்குகிறது.

காவிரியில் வரவர வெள்ளம் அதிகமாயிற்றே ஒழிய குறையவில்லை. வெள்ளம் பெருகப் பெருகக் கிழவிக்குத் துக்கமும் பெருகியது. மகளைப்பற்றிச் சொல்ல வேண்டுமா? இப்படி அன்பர்கள் துயரப் படுவதைச் சிவபெருமான், பொறுப்பாரா? உடனே அவர் இந்தச் செட்டிக் கிழவியைப்போல் உருவங்கொண்டு உறையூர் போய் "அம்மா மகளே! என்னசெய்கிறாய்?" என்று கூப்பிட்டுக்கொண்டே தன் அடிமையின் வீட்டுக்குள் நுழைந்தார். மகள் முன்பே வந்திருந்தமையால், அவள் "அம்மா, வா வந்தாயா! பிழைத்தேன்" என்று கூறிச் சந்தோஷப்பட்டாள். அந்தச் சந்தோஷத்தில் பிரசவ வேதனையும் குறைந்தது.

பிறகு ஸ்வாமி அவளுக்கு என்னென்ன உதவிகள் செய்யவேண்டுமோ அவைகளை யெல்லாம் செய்தார். யாதொரு சிரமமில்லாமல் பிள்ளை சுகமாகப்பிறந்தது. பிறகு செய்யவேண்டிய மருத்துவச்சி வேலைகளையெல்லாம் சுவாமி செய்தார்; பிரசவித்தவளுக்குக் கொடுக்க வேண்டிய மருந்தும் அரைத்துக் கொடுத்தார். இப்படி மூன்றுநாள் ஸ்வாமி அறைகாக்கும்படியாயிற்று. மூன்று நாள்வரையில் காவிரியில் வெள்ளம் குறையவில்லை.

நான்காவது நாள் படகேறி ஆற்றைக்கடந்து கிழவி உறையூருக்கு வந்தாள். கிழவி வீட்டிற்குள் நுழைந்த அக்கணமே ஸ்வாமி மறைந்து விட்டார். கிழவி, பிள்ளையும் கையுமாகத் தன் மகளைப் பிரசவ அறையிலே கண்டாள். கண்டதும் கரைகடந்த சந்தோஷமடைந்து,

"அடி அம்மா, என் கண்ணே, நான் உனக்கு உதவி செய்யப் பக்கத்திலில்லாமற் போய்விடும்படி நேரிட்டு விட்டதே! என்ன செய்வேன்! ஆற்றில் கடக்க முடியாத வெள்ளம் பெருகிவிட்டது. யாரடிவந்தது உனக்குதவி செய்ய?" என்று கேட்டாள்.

இப்படிக்கேட்ட தாயாரை மகள் பார்த்து, ஆச்சரியத்துடன், "ஏனம்மா இப்படிக் கேட்கிறாய்? நீதானே இங்கிருந்தாய்? எனக்கு வேண்டியதெல்லாம் செய்தாய்? உன்னைத்தவிர இங்கே ஒருவருமில்லையே? நீ ஏன் இப்படிப் பேசுகிறாய்?" என்றாள். இதைக்கேட்டதும் தாயார் சற்றாலோசித்து "இப்பொழுதுதானே நான் உள்ளே வருகிறேன், வந்ததும் என்னைப்போல் ஒருத்தி இங்கிருந்தது கண்டேன், இப்போது காணேன். நான் மூன்று நாட்களாய்ப் படாதபாடு பட்டுக்கொண்டு என் உயிரை நானே தின்றுகொண்டு காவிரிக்கு அக்கரையில் கிடந்தேன். எனக்குத் துக்கந்தான் துணையாயிருந்தது. அப்படியிருக்க நானெங்கே இங்கேயிருந்தேன்? சிவபெருமான் நம்மீது இரக்கங் கொண்டிருக்கிறார். அவர்தான் என்னைப்போல் இங்கே வந்திருக்கவேண்டும். இப்போது நான் பார்த்தேன் ஒருத்தியை இங்கே! அவரையன்றி வேறு யாரால் இப்படி வரமுடியும்? கண்மணி, ஜகதீசன் உனக்குத் தாயாகவந்து மருத்துவஞ் செய்யும்படியாயிருந்த இந்த பாக்கியம் யாருக்குக் கிடைக்கும்? இது பெருந்தவத்தின் பயனென்பதில் ஐயமில்லை. சிவபெருமான் அடியார்க் கடியனல்லவா? எல்லோரிடத்திலும் அன்புடையவனல்லவா? திக்கற்றவர்க்குத் தெய்வமே துணையென்பது வீணாகுமா?—இந்த இறைவனையும்

மறந்து திரிகிறார்களே பாவிகள்! நாமென்ன பக்தி செய்து விட்டோம் நம்மீது ஜகதீசன் இவ்வாறு திருவுளங் கொள்ள?" என்று கூறி வியந்தாள்.

மகளும் சிவபெருமான் திருவருள் செய்திருக்கிறார் என்பதை உணர்ந்து பரமானந்தமடைந்து துதித்தாள். அவளுக்கு அந்த ஜகதீசன்மீது பக்தி இன்னும் அதிகரித்தது. பிறகு அவள், தனக்குச் சுவாமி தன் தாயைப் போல் வந்தது முதல் அவர் தனக்குத் துணைசெய்த அழகையெல்லாம் சொல்லி மகிழ்ந்தாள்; அதற்குமுன் தனக்கு அவர் வழியில் காட்சிதந்த அதிசயத்தையும் கூறினாள். இருவரும் ஈசுவரனைத் துதித்தார்கள்; இனியென்றும் உன்னை மறவாத வாழ்வு தந்து ஆதரிக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்துகொண்டார்கள்.

இந்தத் திருவிளையாடல் எங்கும் பரவியது. பிறகு திரிசிராமலை ஈசனுக்குத் தாயுமானவர் என்கிற பெயர் ஏற்பட்டது. அந்தச் செட்டிச்சி பின்னும் அதிகமான பக்தி சிரத்தையுடன் தன் தொண்டைச் சிவபெருமானுக்குப் புரிந்துவந்து முடிவில் முத்தியடைந்தாள். இன்றைக்கும் அந்த ஆலயத்தில் அந்த பக்தசிரோமணியின் பேரால் ஒரு திருவிழா நடந்து வருகிறது.

சிவபெருமான் தன் அன்பர்களிடம் கொள்ளும் கருணையைப் பார்த்தீர்களா? இப்படிப் பகவான் எவ்வளவோ லீலைகளைச் செய்திருக்கிறார். அவரிடத்தில் அன்பு பூண்டவர்களை அவர் கைவிடுவதில்லை. ஆகையினாலேதான் பெரியோர்கள் "பக்தி செய்துகொண் டிருந்தால் முத்திபெறலாம்" என்று கூறி ஈசனைத் துதிக்கின்றனர்.

மேல்நாட்டு நாகரிகம்.

மேல் நாட்டில் ஒரு வீட்டில் குழந்தைகள் சச்சரவு செய்து கொண்டிருந்தன. அப்போது அந்த வீட்டுப் புருஷன் தன் பெண்சாதியைக் கூப்பிட்டு "என்ன சச்சரவு அங்கே" என்று கேட்டான்.

பெண்சாதி உம்முடைய குழைந்தைகளும் என்னுடைய குழந்தைகளும் நம்முடைய குழந்தைகளுடன் சச்சரவு செய்துகொண் டிருக்கின்றன. (Your children and my children are fighting with our children) என்று சொன்னாள்.

அப்போது அவ்வீட்டுக்குச் சென்றிருந்த ஓர் இந்தியன் இதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு "அவ்வீட்டு ஆடவனைப்பார்த்து "நீங்கள் இருவரும் புருஷன் பெண்சாதிகள் தானே. அப்படி யிருக்கத் தங்கள் மனைவி உம்முடைய குழந்தைகளும் என்னுடைய குழந்தைகளும் நம்முடைய குழந்தைகளுடன் சண்டை செயகின்றன என்று சொல்லுகிறாளே; அது எப்படி?" என்று கேட்க அதற்கு அவ்வாடவன் "நான்கு குழைந்தைகளை வைத்து விட்டு என் முதல் மனைவி இறந்துவிட்டாள். இப்போதுள்ள என்மனைவியாகிய இவளுக்கு முதல் புருஷனால் நான்கு குழந்தைகள் பிறந்தவுடன் அவன் இறந்து விட்டான். பிறகு நாங்கள் இருவரும் கல்யாணம் செய்து கொண்டோம்! எங்கள் இருவருக்கும் பிறந்த குழந்தைகள் நான்கு. ஆகமொத்தம் பன்னிரண்டு குழந்தைகள். ஆகவே எனக்கு முதல் மனைவியினால் பிறந்த குழந்தைகளை 'உம்முடைய குழந்தைகள்' என்றும் அவளுடைய முதல் புருஷனால் பிறந்த குழந்தைகளை 'என்னுடைய குழந்தைகள்' என்றும் எங்கள் இருவருக்கும் பிறந்த குழந்தைகளை 'நம்முடைய குழந்தைகள்' என்றும் சொன்னாள்" என்று விளக்கினான். இந்தியன்கேட்டு இப்படியும் ஒரு நாகரிகமுண்டா என்று ஆச்சரியப் பட்டான்.

எவை பெரியவை?

தமிழரசர் காலத்தில், வித்வசபை யொன்றில், "பூமி, கடல், மலை இம் மூன்றும் நாம் பார்க்கும் பொருள்கள் எல்லாவற்றினும் பெரியவையாகக் காணப்படுகின்றன; இவற்றினும் பெரியவை உலகத்தில் இருக்கின்றனவா? இருந்தால் எவை பெரியவை?" என்கிற கேள்வி யொரு சமயம் உண்டாயிற்று. தக்க பதில் உடனே சொல்ல எவருந் துணியவில்லை. சிறிது ஆழ்ந்த யோசனையி லிருந்தார்கள்.

இவ்வாறிருக்க, பெரிய புராணம்பாடிய சேக்கிழார் இக் கேள்விக்கு விடையளிக்க முற்பட்டார். இம் மூன்றுக்கும் மூன்று தருமங்களைத் தனித்தனி திருக்குறளினின்றும் எடுத்து உயர்த்திப் பேசினார். அனைவரும் ஆச்சரியப்பட்டு ஆனந்த பரவசரானார்கள்.

அம் மூன்று தருமங்களெவை யென்னில்—அவை காலத்திற் செய்த வுதவி, பலனை எதிர்பாராது செய்த வுதவி, அடக்கம் என்பவையாம். இவற்றை,

* (1) காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

* 1. ஒருவன் காலத்திற் செய்தவுதவி, அற்பமாயினும், அந்தக் காலத்தை நோக்க, பூமியினும் பெரியதாம்.

(2) பயன் தூக்கார் செய்தவுதவி நயன் தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

(3) நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

என்னுங் குறள் வாக்கியங்கள் விளக்குகின்றன. இவற்றின் விளக்கத்தைப் பின்வரும் கதைகள் வாயிலாகத் தனித்தனியே தெரிந்துகொள்ளலாம்.

முதல் முதல் பூமியிற் பெரியது காலத்திற் செய்தவுதவி என்பதை எடுத்துக்கொண்டு இதன் சம்பந்தமாக முன் நடந்த ஒருவிஷயத்தைக் கவனிப்போம்.

ஔவையாரைப்பற்றி நாம் எல்லோருங் கேள்விப்பட்டிருக்கிறோம். அவள் நமது ஞானப்பாட்டியல்லவா? அவளுக்குத் தெரியாத விஷயம் உலகத்தில் ஏது? படிப்பிலும் ஒழுக்கத்திலும் மகா வல்லமை பெற்றவள். ஸரஸ்வதியே அவளென்றால் அவளுடைய பெருமையைச் சொல்ல யாராலாகும். அப்படிப்பட்டவள் ஒருநாள் ஒரு காட்டு மார்க்கத்தில் மழையிலகப்பட்டுக் கொண்டாள். அவளுக்கு அங்கு எங்குந் தங்குவதற்குத் தகுதியான வசதி கிடைக்கவில்லை. அதனால் அவள் மழையில் முற்றும் நனைய வேண்டியதாயிற்று.

இப்படி மழையில் நனைந்த ஔவை நடுக்கங்கொண்டு சமீபத்திலிருந்த திருக்கோவலூரை யடைந்தாள். அடைந்தவள் அந்த ஊரில் எவ்விடத்தில் தங்கலா மென்று

---

2. பின்னுண்டாகும் பலனை எதிர்பாராது செய்த வுதவியின் நன்மை கடலினும் பெரியதாம்.

3. அடங்கி நடப்பவனுடைய அடக்கம் மலையின் உயர்ச்சியினும் மிகவும் பெரியதாம்.

இப்படியும் அப்படியுமாக அலைந்துகொண்டிருந்தாள். ஒருவரும் அவளைக் கவனிக்கவில்லை. திருக்கோவலூரில் பெண்ணை நதிக்குத் தென்புறத்தில் ஒரு குடிசையிருந்தது. அது பாரி என்னும் ஓரிடையனுடைய வீடு. அவ்வீட்டிலாவது சிறிது தங்கலாமென்று ஔவை அதை நோக்கிச் சென்றாள். அங்கு இரண்டு கன்னிகைகள் இருந்தார்கள். அவர்கள் பாரி என்பவனுடைய புத்திரிகள். ஒருத்திக்கு அங்கவை என்றும் மற்றொருத்திக்குச் சங்கவை என்றும் பெயர்; மிகவும் ஏழ்மையான ஸ்திதியில் இருந்தார்கள். அந்தப் பெண்கள் இருவரும் ஔவையைக்கண்டு "யாரோ ஒரு தள்ளாத கிழவி மழையிலடிபட்டு உடல் நடுங்க நடுங்கிக்கொண்டு நமது குடிசையை நாடி வருகிறாளே-ஐயோ-பாவம்-ஒருவரும் அவளை ஏறெடுத்துப் பார்க்கவில்லை போலும்" என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு இளகிய மனதுடன் ஓடிவந்து அக்கிழவியின் கையைப் பிடித்துக்கொண்டு "ஆயா! நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்? இப்படியும் மழையில் தெப்பக்கட்டையாய் நனையலாமா? எங்களைப் போன்றவர்களே குளிர் தாங்க முடியாதவர்களாய் இருக்க, நீங்களெப்படிச் சகித்துக் கொண்டிருக்கிறீர்கள்? இதோ எங்கள்குடிசை. கொஞ்சநேரம் இவ்விடத்தில் தங்கியிருந்து, நனைந்த ஆடையை உலர்த்திக் கட்டிக் கொண்டு, ஆயாசந்தீர்ந்து, பிறகு எங்கேபோகவேண்டுமோ அங்கேபோகலாம். இதற்குள் மழையும் நின்று விடும். வாருங்கள் ஆயா வாருங்கள். நாங்களும் உங்கள் பேத்திமார்கள்தான். வித்தியாசமாக ஒன்றும் எண்ண வேண்டாம்" என்றுசொல்லி அழைத்துவந்து, அவள்

உடுத்திருந்த ஆடையையவிழ்த்துப் பிழிந்து ஒருபுறம் உலரவைத்து, தங்களிடமிருந்த நீலச்சிற்றாடையை அணி வித்து, கும்பிடுசட்டி (தீச்சட்டி) கொண்டுவந்து வைத் துக்குளிர்காயச் செய்தனர். பிறகு தங்கள் புழைக்கடையி லிருந்து முருங்கைக் கீரையைப் பறித்துவந்து, சுத்தஞ் செய்து, நெய்விட்டுச் சமைத்து, வீட்டிலிருந்த கேழ்வரகு களியுடன் சாப்பிடச் செய்தார்கள்.

* இந்த உபசரணையினால் நமது பாட்டியார் ஆனந்த மடைந்தனர். "மழையில் நனைந்து வருந்திவந்த சமயத்தில் இப்படிப்பட்ட உபசரணையை இந்த ஏழைப்பெண்கள் நமக் குச் செய்தார்களே. இவர்கள்செய்த உதவி சிறியதானா லும் தற்காலம் அதுவே பெரியதல்லவா? அதற்குப் பிரதி உபகாரம் உலகத்தில் செய்யக்கூடியது ஒன்றுமேயில்லை. ஆகையினால்தான், உலகத்துக்கு வேண்டிய முக்கிய தரு மங்களை வெளியிடத்துணிந்த நமது தம்பி வள்ளுவனும்,

> " காலத்தினாற்செய்த நன்றி சிறிதெனினும்
> ஞாலத்தின் மாணப் பெரிது"

என்று பட்டயஞ்சாற்றிவிட்டான். ஆகிலும் இக்குழந்தை கள் நம்மை மகிழ்வித்தார்களே. இவர்களை எப்படி நாம் சும்மாவிட்டு நீங்குவது? நீங்கினால் உரிய சமயத்தில் உத விய நன்றியை மறந்த பாவத்திலன்றோ நாம் சாருவோம். அந்த நன்றியை நினைக்க நினைக்க இவர்களுக்கு நமது உயிரைத் தத்தஞ் செய்துவிட்டுப் போகலாமா என்கிற

---

* இச்சரித்திர சம்பந்தமான இனிய பாடல்களையும் அவற் றின் பொருள் விளக்கத்தையும் 'ஔவை அருந்தமிழ்' என்னும் நூலில் இனிதுகாணலாம்-விலை அணா 12. பாலவிநோதினி ஆபீஸில் கிடைக்கும்.

எண்ணம் உதித்துவிடுகின்றதே. இப்பேருதவியை நாம் எப்படி மறப்பது? இந்திரஜித்தன் விடுத்த நாகபாசத்தால் இலக்ஷ்மணன் கட்டுண்டபோது, சோகசாகரத்தில் முழுகியிருந்த ஸ்ரீராமபிரானைத் தேற்றும் பொருட்டுக் கருடாழ்வான் தோன்ற, நாகபாசம் நலிந்தகன்று இலக்ஷ்மணன் தெளிந்தெழுந்தான். அப்போது ஸ்ரீராமபிரான், கருடாழ்வான் அக்காலத்திற் செய்த பேருதவியை நினைத்து அந்தக் கருடாழ்வானை நோக்கி,

*" ஐய நீ யாரை ? எங்கள் அருந்தவப் பயத்தினால் வந்
தெய்தினை ; உயிரும் வாழ்வும் ஈந்தனை ; எம்மனோரால்
கையுறை கோடற்கொத்த காட்சியை அல்லை ; மீட்சி
செய்திறம் இலை........................" (அன்றியும்)

† " கண்டிலை; முன்பு சொல்லக் கேட்டிலை; கடனென்றெம்பால்
கொண்டிலை; கொடுப்பதல்லால் குறையிலை; இதுநின்கொள்
உண்டிலை என்னநின்ற உயிர்தந்த வுதவியோனே! [கை;
பண்டிலை நண்பு; நாங்கள் செய்வதென் ? பகர்தி"

என்று புகழ்ந்தனன்.

இது நமக்கு என்ன தெரிவிக்கின்றது? காலத்திற் செய்த உதவியைப் பெரிதுங் கவனித்து, அவ்வுதவி புரிந்தவருக்குப் பண்ணத்தக்க பதில் உதவி உலகத்தில் இல்லாமையால், இனிய வார்த்தைகளினாலாவது அவனை மகிழ்விக்கச் செய்வது உதவி பெற்றவருக் குரிய கடமை என்பதை அறிவிக்கின்றதல்லவா! ஆம்—அதுதான் உத்தமருக் கடுத்தது. ஆகையால் முன்பின் பழகாமலும்

* யாரை-யார் ; கையுறை-பிரதிபலன் ; கோடல்-கொள்ளுதல் ; காட்சி-நோக்கமுடையவன் ; மீட்சி-பதில்; செய்திறம்-செய்யத்தகுந்த பாக்கியம்.

† கொள்கை-சுபாவம் ; பகர்தி-சொல்வாயாக.

யாதொரு பலனையுஞ் செய்யாமலு மிருந்த என்னை இவ்வறிவறிந்த பெண்மணிகள் பரமானந்த மடையும்படி உபசரித்தார்களே. இச் சிறந்தகுணம் எல்லோருக்கும் வருமா? புண்ணியப் பிறவிகளாதலின் இவர்களுக்கு அப்பெருங்குணம் தோன்றிற்று. நல்லது, இவர்களுக்கு நான் சிறந்ததொரு நன்மையைச் செய்யாமற் போவேனேயாகில், நான் அரிதிற் பெற்றுள்ள தெய்வீகத்திற்குத் தான் என்ன பெருமையுண்டு?" என்று யோசித்து, உடனே சேர சோழபாண்டியர்களைக் கல்யாணச் சடங்குக்கு வேண்டிய யாவையுஞ் சித்தஞ் செய்துகொண்டு திருக்கோவலூருக்கு வந்து சேரும்படி அவர்களுக்கு ஓலை எழுத விநாயகமூர்த்தியை வரவழைத்து அவரால் ஓலை எழுதுவித்தார். அரசர்கள் அவ்வாறே வந்து அங்கவை சங்கவை என்பவர்களைப் பெரிய ஆடம்பரத்துடன் விவாகஞ்செய்துகொண்டு போயினர்.

பார்த்தீர்களா பிள்ளைகளே! காலத்திற் செய்த உதவியால் யாதவச் சிறுமியருக்கு எய்திய லாபத்தை? இந்த வுதவி சிறியதாயினும் பூமியின் பரப்பைவிட மிகப் பெரியதென்று மேலோர் கூறுகின்றனர். பூமியின் எல்லையை ஒருவாறு அளவுபடுத்தினும் இந் நன்றியின் திறத்தை அளவுபடுத்த ஒருவராலும் முடியாதென்பதை யுணர்ந்து இத்தகைய உதவியை நேர்ந்தபொழுது செய்வதற்குப் பின் வாங்கவேண்டாம். நாம் பெருமை யடைவதற்குரிய முக்கியமான வழிகளில் இதுவே தலைமையுள்ளதாம். அடுத்த சஞ்சிகையில் பலனை எதிர்பாராது செய்த வுதவியின் சிறப்பைப் பற்றிப் பேசுவாம்.

ம. இராஜகோபால பிள்ளை,
வித்வான், கோமளேசுவரன் பேட்டை.

புலவனும் சிறுவனும்.

புலவன்.—தம்பி, நீ ஆத்திசூடி படித்தாயா?

சிறுவன்.—ஆமாங்க, ஆறுண்டுகளுக்கு முன்னேயே படித்து விட்டேனே.

புலவன்.—படித்து விட்டாயா? இப்போது என்ன படிக்கிறுய்?

சிறுவன்.—அருணுசல புராணம்.

புலவன்.—அப்படியா? ஆத்திசூடியின் முதல் கட்டுரை சொல்லு.

சிறுவன்.—அறஞ்செய விரும்பு.

புலவன்.—அறமென்றுல் என்ன தம்பி?

சிறுவன்.—அறம் என்றுல் தருமம்.

புலவன்.—தருமம் என்றுல் என்ன தம்பி?

சிறுவன்.—தருமம் என்றுல் பிச்சையிடுகிறது.

புலவன்.—ஐயமிட்டுண் என்று வேறே கட்டுரை அதற்கிருக்கிறதே தம்பி; இதற்கு வேறே பொருளல்லவா இருக்க வேண்டும்? பலர் இதற்கு ஈகைதான் பொருளென்று நினைக்கிறுர்கள். அது தவறு. அறக்கடலுக்கு ஈகை ஒருதுறை.

சிறுவன்.-அதற்கென்ன உரை? தாங்கள் சொல்லுங்கள்.

புலவன்.—தம்பி, திருக்குறளை நன்றுய்ப் படித்தவன்றுன் ஆத்திசூடி படித்தேன் என்று சொல்லலாம் அப்பா.

திருவள்ளுவர் — அறனென்பது, இல்வாழ்க்கை என்றும்; அறமென்பது, மனதில் குற்றமற்றிருப்ப தென்றும்—அது பொறாமை, ஆசை கோபம் கொடுஞ் சொல் கலவாத நினைப்பும் வாக்கும் செயலும் என்று விளக்கியிருக்கின்றார்கள்.

சிறுவன்.—அறத்திற்கு அவ்வளவு சொல்லவேண் டுமா?

புலவன்.—படித்ததை விட்டுவிடாதே. ஆத்திசூடி படிப்பவன் அறிவின் அகலத்திற்குத் தக்கவாறு உரை காணக்கிடப்பது. ஆதாலால் அது உருவத்திற் சிறிதா யினும் உருள்பெருந்தேருக்கச்சாணி போல்வது.

கா. சி. சிவசங்கர பண்டிதர்.

பொறாமை

மனிதர் கொள்ளுங் கெட்டகுணங்களிலே பொறாமை என்பது ஒன்று. பொறாமையென்பது, ஒருவர்க்குள்ள பொரு ளையோ அல்லது புகழையோ மற்றும் வேறு எந்த மேன்மை யையோ கண்டு மனம் பொறுக்காமல் தனக்குள் கொள்ளும் ஒரு பகையாம். இதை உட்பகை என்று சொல்வதுண்டு. இது மிகப் பொல்லாத குணம், இந்தக் கெட்டகுணத்தை ஒருவன் கொள்வானாகில் அவனுக்கு மேலும் மேலும் துன் பமே உண்டாகும். வேறு எந்தக் கெட்ட குணங்களும் ஒரு வர்க்கு இதைப்போல் தீமையை உண்டாக்காது. இது தீமை தருவதோடு போகாது. தன்னை அடுத்தவனை வேரொடு அழித் துவிடும். இந்த உண்மையை, நல்ல நீதி நெறிகளைப் போதிக் கும் வேதமென்று சொல்லுகிற பாரதம் என்னும் ஆதிகாவியம் வாசித்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

EDUCATION AND SCIENCE

THE AIM OF EDUCATION.

As enunciated by the *Mill Gate Monthly* here is the aim of education for twenty one different points of views.

What is the Aim of Education ?
The Student says Books.
The Scholar says Knowledge.
The preacher says Character.
The Minister says Service.
The Philosopher says Truth.
The Artist says Beauty.
The Epicurean says Happiness.
The Stoic says Self-Control.
The Christian says Self-denial.
The Democrat says Self-government.
The Statesman says Co-operation.
The Ruler says Loyalty.
The Patriot says Patriotism.
The Judge says Justice.
The Aged Man says Wisdom.
The Youth says Achievement.
The Soldier says Courage.
The Editor says Success.
The Manufacturer says Efficiency.
The B nker says Wealth.
The Dreamer says Vision.
The Child says Play.
The Maiden says Love.
The Man says Work.
The Friend says Friendship.
The Pedagogue says Personality.
The Physician says Health.
The Biologist says Growth.
The Psychologist says Unfoldment.
The Sociologist says Adjustment.

But the true Educator says all of these and more must be the aim of Education.—*The Business Chronicle.*

THE TATA PRINTING WORKS, 5, THAMBU CHETTY ST., MADRAS.

AYURVEDIC
EYE TREATMENT
OF
Mr. T. S. AMIRTHALINGAM PILLAI
OF TANJORE NOW IN MADRAS.

கண் வைத்தியம்

எமது நண்பர்களில் பலர் எமது வைத்தியசாலையில் கண்வைத்தியமும் நடத்தினால் அநுகூலமாயிருக்குமென்று கேட்டுக்கொண்டதின் பேரில், ஆயுர்வேத கண்வைத்திய சாஸ்திரத்தைக் கற்றுணர்ந்தவரும், தஞ்சாவூர் சமஸ்தான அரண்மனை கண்வைத்தியரும், மெடல் பெற்றவரும், கண் வைத்தியத்தில் ஸ்பெஷலிஸ்டுமாகிய Mr. T. S. அமிர்தலிங்கம் பிள்ளையை வரவழைத்திருக்கிறோம். கண்ணிலுண்டாகும் காட்டராக்ட் (Cataract) கண்ணோய், அமரம், பில்லம், அன்னகோபம் முதலிய சாஸ்திர சம்பந்தமான வியாதிகளையும், அடிபட்ட கண்கள், குந்தம் தள்ளிய கண்கள், பூவிழுந்த கண்கள் இன்னும் அநேகவிதமான கண் வியாதிகளையும், எரிச்சல், உறுத்தல் முதலிய கொடுமையில்லாத உயர்ந்த ஔஷதங்களைக் கொண்டு, ஆப்பரேஷன் இல்லாமல் சௌக்கியப்படுத்தப்படும். ஏழைகளுக்கு இலவசமாய் வைத்தியம் செய்யப்படும்.

நோயாளிகளை காலை 7-மணி முதல் 9-மணி வரையிலும் மாலை 4-மணி முதல் 6-மணி வரையிலும் கவனிக்கப்படும்.

டாக்டர் வி. ஆர். சுந்தரம்,
"ஆயுர்வேத வைத்திய மந்திரம்"
பைகிராப்ட்ஸ் ரோட்,
இராயப் பேட்டை, சென்னை.

JATAVALLABAR.

BY

VARAKAVI-TIRU-A. SUBRAMANYA BHARATI.

A most Realistic Original High class Social Tamil Novel.

Mr. Bharatiar's Jatavallabar deals with the very much changed and still changing conditions of home life, of married life, of social life and particularly with the way in which these changed conditions are affecting us in the Tamil country.

This Novel clearly portrays the effect of the impact of the West on the East in Social matters among all classes of Hindus and mercilessly exposes the formidable results of demanding dowries for daughters or offering them to educated young men.

Certainly by reason of its subject it will be as much discussed, and *all who read it will see in it something of their own lives and their own aspirations.*

Into this book the author has poured a philosophy accumulated hrough a life-long observation of women, their hardships, and heartbreaks, their blunders and triumphs. The situation between husband and wife is dramatic and unusual, and is likely to capture the imagination of the reader who likes fiction to be true to life and of value as a picture of contemporary social and moral force.

Though the book contains 600 pages every page is interesting and instructive.

Can be safely placed in the hands of our females.

Price Rs. 2—8—0

Please apply to :—Manager,

BALAVINODINI OFFICE,

Royapettah P. O., MADRAS.